# ராதே க்ருஷ்ணா

ராதேக்ருஷ்ணா இந்த திருநாமத்தை தொடர்ந்து பாராயணம் செய்துவாருங்கள் - அற்புதங்களை உணருவீர்கள்

"ध्यायन् कृते यजन् यज्ञैस् त्रेतायम्
द्वापरे वीर्च्चयन् यताप्नोति तताप्नोति
कलौ संकीर्त्य केशवम्॥"

(விஷ்ணு புராணம் 6-2-17)

க்ருதயுகத்தில் பகவானை தியானம் செய்பவனுக்கு என்ன பலனாது கிடைக்கப்பெறுகிறதோ த்ரேதா யுகத்தில் யாக யக்ஞங்களால் பகவானை ஆராதனை செய்பவனுக்கு என்ன பலனாது பெறப்படுகிறதோ, த்வாபர யுகத்தில் பகவானை அர்ச்சிப்பவனுக்கு என்ன பலனானது அடையப்படுகிறதோ, அதே பலன் கலியுகத்தில் பகவான் ஹரியுடைய நாமத்தை உச்சரிப்பவனுக்கு கிடைக்கிறது.

இவ்வளவு உயர்ந்தது பகவனுடைய நாம மகிமை. நாமம் என்றால் பகவானுடைய பெயர் என்று பொருள். அந்த நாம ஸங்கீர்த்தனம் அத்தனை பலமுடையதா என்று தோன்றுகிறதா? சந்தேகமாக உள்ளதோ? நாமஸங்கீர்த்தனத்தின் முழுமையான மகத்துவத்தை ஆயிரம் நாகொண்ட ஆதிசேஷனாலேயே எடுத்துக்கூற இயலாது என்று பெரியவர்கள் கூறுகிறார்கள். அந்த நாமத்தின் மகிமையை உண்மையான நம்பிக்கையால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும்.

தர்க்கத்தினாலோ, வாதத்தினாலோ, வரட்டு சண்டை பேச்சுக்களாலோ, விஞ்ஞானத்தைக் கொண்டோ, நாமத்தின் மகிமையை எந்தக் காலத்திலும் யாரும் புரிந்து கொண்டதில்லை, புரிந்து கொள்ளவும் முடியாது. இது இப்பிரபஞ்ச அறிவிற்கும், அனுபவத்திற்கும் அப்பாற்பட்டது.

"ந ஹி அத: பரமோ லாபோ தேஹினாம் ப்ராப்யதாமிஹ
யதோ வின்தேத பரமாம் யாந்திம் நஷ்யதி ஸம்ஸ்ருதி"

(ஸ்ரீமத் பாகவதம் 11-5-37)

எந்த நாம ஸங்கீர்த்தனத்தால் மேலான மேதாருபமான அமைதியை அடைகிறார்களோ, ஜனன மரண ரூபமான ஸம்ஸாரம் நாசமடைகிறதோ அந்த நாமஸங்கீர்த்தனத்தைக் காட்டிலும் இந்த ஸம்ஸாரத்தில் சுற்றித் திரிகின்ற ப்ராணிகளுக்கு மேலான லாபமானது இல்லை. நாம ஜபத்தினால் மட்டுமே மேலான அமைதி கிடைக்கிறது.

இதைத்தவிர வேறு கதி கலியுகத்தில் கிடையவே கிடையாது. எப்பேற்பட்ட சந்தர்ப்பத்திலும் பகவானுடைய நாமம் நிச்சயமாக காப்பாற்றியே தீரும். இதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டவே வேண்டாம்.

மிகப்பெரிய க்ஷத்ரியர்களும், தர்மத்தின் நுணுக்கம் அறிந்தவர்களும், பகவத் த்யானம் உள்ளவர்களும் நிறைந்த மஹாசபை. அந்த சபையின் நடுவில் ஒரு குலமகள், பாண்டவர்களின் மனைவி, த்ரௌபதியின் துகில் உறியப்படுகிறது. அவள் கதறி அழுது தனக்கு நியாயம் கேட்கிறாள். விதுரர், விகர்ணனைத் தவிர யாரும் அவளுக்காக பேசவில்லை. பேசிய இவர்களின் பேச்சும் எடுபடவில்லை. அவளின் மானம் பறிபோய்விடுமோ என்கிற நிலைமை.

தன் கணவர்களிடம் கெஞ்சுகிறாள். மிகப்பெரிய பலசாலிகள். தெய்வாம்சம் மிக பொருந்தியவர்கள். ஆனால் அவளைக் காப்பாற்ற முடியவில்லை. பீஷ்மர், க்ருபாச்சாரியார், துரோணாச்சாரியார், திருதராஷ்டிரன் யாவரும் மௌனமாக இருந்தார்கள். த்ரௌபதி தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தன்பலத்தால் முயன்று தோற்றுப் போனாள்.

அந்தோ! பரிதாபம்! அப்போதுதான் அவளுக்கு தோன்றிற்று அவனைத் தவிர வேறு யாரும் என்னைக் காப்பாற்ற முடியாது. அவன் ஒருவன்தான் என்னுடைய துன்பத்தை நீக்கி எனக்கு ஆனந்தம் அளிப்பவன். "அவனையே கூப்பிடுகிறேன். நான் அவனுடைய சொத்து ஆயிற்றே. அவனுக்கு தன்னுடைய சொத்து தேவை என்றால் அவனே அதை காப்பாற்றிக் கொள்ளட்டும். என் தேகம், மனது, ஆத்மா, வாழ்க்கை எல்லாம் அவனுடைய திருவடிகளில் சரணாகதி செய்து விட்டேன்" என்று நினைத்து உடனே திடமான நம்பிக்கையோடு பகவான் ஸ்ரீ கிருஷ்ணனை கூப்பிட்டாள்.

ஹே க்ருஷ்ணா! ஹே முகுந்தா! ஹே பக்தவத்சலா! ஹே தீனதயாளா! ஹே க்ருபாசாகரா! ஹே மாதவா! ஹே புண்டரிகாக்ஷா! ஹே கமலாகாந்தா! ஹே ராதாரமணா! ஹே கோவிந்தா! ஹே ஜகத்குரோ! என்னைக் காப்பாற்று! ஹே க்ருஷ்ணா! க்ருஷ்ணா! க்ருஷ்ணா! க்ருஷ்ணா! க்ருஷ்ணா!

என்று தன்னை மறந்து இரு கைகளையும் மேலே தூக்கிக் கொண்டு பகவானுடைய நாமத்தில் தன்னையும் மறந்தாள்.

அப்போது பகவான் ஸ்ரீகிருஷ்ணன் த்வாரகையில் தனது தர்மபத்தினி சத்யபாமாவுடன் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தார். த்ரௌபதியின் அலறல் அங்கே கேட்க சொக்கட்டான் ஆடிக்கொண்டருந்த பகவான் ஸ்ரீகிருஷ்ணன் ஆட்டத்தை விட்டுவிட்டு வேகமாக எழுந்து வாசலுக்கு ஓடினார். போன வேகத்திலேயே திரும்ப வந்த உட்கார்ந்து கொண்டு சொக்கட்டான் ஆட ஆரம்பித்தார். அதைப் பார்த்த சத்யபாமா பகவானிடம் "என்ன ஸ்வாமி ஏதோ அவசரமாக ஓடினீர்கள்! ஆனால் உடனேயே திரும்பி விட்டீர்கள்! என்ன விஷயம்" என்று கேட்டாள்.

அதற்கு பகவான் "ஹஸ்தினாபுரத்தில் எல்லோர் முன்னிலையில் மஹாசபையில் த்ரௌபதியின் துகில் உறியப்படுகிறது. அவள் என்னைக் காப்பாற்ற கூப்பிட்டாள். அதற்காகத்தான் ஓடினேன்" என்றார். உடனே சத்யபாமா ப்ரபோ அவளைக் காப்பாற்ற ஓடிவிட்டு ஏன் காப்பாற்றாமல் உடனே வந்து அமர்ந்து விட்டீர்கள்! அவளைக் காப்பாற்ற வேண்டியது உங்கள் கடமையாயிற்றே. உத்தமமான பெண்ணின் மானம் பறிபோகப் போகிறதே! அதுவும் உங்களை

மட்டுமே நம்பும் திடமான பக்தையின் மானம் பறிபோக விடலாமா? எனக்கு உங்கள் செய்கையின் அர்த்தம் விளங்கவில்லை என்றாள்.

அப்போது சந்திரவதனனான, சாஷாத் நாராயணனான ஸ்ரீ கிருஷ்ண பகவான் புன்னகை பூத்த திருமுகத்தோடு, ஆனந்தத்தோடு "ஹே ப்ரிய சகி! சத்யபாமா! நான் அவளைக் காப்பாற்றத்தான் வேகமாக சென்றேன். ஆனால் அதற்குள்ளாக என்னுடைய நாமமே அவளுடைய புடவையாய் சுரந்துவிட்ட காரணத்தால் நான் அங்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது" என்று கூறினார். அதைக்கேட்ட சத்யபாமா பகவானுடைய பாதாரவிந்தங்களில் சேவித்து "உங்கள் நாமஜபத்தின் மகிமையை இன்று பரிபூரணமாக உணர்ந்தேன்" என்றாள்.

இத்தனை உசத்தி பகவானுடைய நாம ஜபம். இதை நம்ப முடியுமா என்றால் நம்பித்தான் ஆகவேண்டும். எப்படி? அம்மா தன் குழந்தையிடம் இவர்தான் உன் அப்பா என்று சொல்லுவதை எப்படி நம்புகிறோமோ அப்படியே இதையும் நம்ப வேண்டும். நம்பிக்கையோடு கூறித்தான் பாருங்களேன்! அதன் பலம் அப்போதுதான் புரியும். யாரும் நம்மிடம் இருந்து நம்முடைய கேவலங்களையோ, அசங்கத்தையோ, பாவத்தையோ, கெட்ட விஷயத்தையோ வாங்கிக் கொண்டு அதை ஜீரணித்துக்கொண்டு நமக்கு சுகம்தர தயாராக இல்லை. யாராலும் அதை ஜீரணிக்க இயலாது. பகவானுடைய நாம ஜபமானது நம்மிடம் இருக்கும் அத்தனை கேவலங்களையும் வாங்கிக் கொண்டு அதை ஜீரணம் செய்துவிட்டு நமக்கு நல்லதை மட்டுமே தருகிறது ஆகவேதான் நாமஜபம் உசத்தியாகிறது.

ராதேக்ருஷ்ணா

பூஜ்யஸ்ரீ ஸ்ரீ அம்மாவின் சிஷ்யன்
மஹான் ஸ்ரீ கோபாலவல்லிதாஸன்

பூஜ்யஸ்ரீ ஸ்ரீஅம்மா
ராதேக்ருஷ்ண ஸத்சங்கம்
18/17, ஸ்ரீராம் காலனி,
தாம்பரம் சானிடோரியம் (கிழக்கு),
சென்னை-600 047.
தொலைபேசி : 22237769
E-mail : ammagvd@yahoo.co.in
Website : www.radhekrishnasatsangam.freewebsite.hosting.com

***Mumbai Office*** : 201, Chandresh Apartments,
Gandhi Nagar, Dombivli (E) 421 204.
Tel. 95251 - 2821579 / 2801162